SRI K. VINAYAKAM: With the object of increasing the output of wool in our State, Government have been importing sheep from Rajasthan and foreign countries. How are their powers of procreation to increase suitable breeds? Are they congenial to our weather?

THE HON SRI M. BHAKTAVATSALAM: I may tell the hon. Member that they are quite all right.

SRI M. R. KANDASWAMI MUDALIYAR: ஸார், இப்போது சேலம் ஜில்லாவிலுள்ள மேய்ச்சேரியில் ஆடுகள் அதிகமாக பயன்படுகின்றனவா? அங்கு நீண்ட ரோமமுள்ள ஆடுகளை வரவழைக்க அரசாங்கம் ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறதா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: மேய்ச்சேரியில் இருக்கின்ற ஆடுகள் அதிகமாகவும் மாமிசத்திற்குத்தான் பயன் படுகின்றன.

Last grade servants (discharge)

*** 1117 Q.—SRI V. K. KOTHANDARAMAN:** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) சென்னை சர்க்கார் கடைநிலை ஊழியர் சங்கம், குடியாத்தம் கிளை சார்பில் கடைநிலை ஊழியர்களை வேலையிலிருந்து நீக்குவதுபற்றிய தீர்மானம் ஏதேனும் சர்க்காருக்கு அனுப்பப் பட்டதா?

(இ) அதன்பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

THE HON. SRI C. SUBRAMANIAM: (அ) No Sir.

(இ) Does not arise.

Radios in buses (accidents)

*** 1118 Q.—SRI V. K. KOTHANDARAMAN:** கனம் மின்சார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) 28–1–61-ல் 207-ம் கேள்வியின் பதிலையொட்டி பஸ்களில் ரேடியோக்கள் வைத்ததின் விளைவாக எத்தனை விபத்துக்கள் ஏற்பட்டன?

(இ) உயிர் சேதம் ஏதாவது ஏற்பட்டதா?

THE HON. SRI V. RAMAIAH: (அ) & (இ) No information is available. It is considered that radio sets, if installed in buses will be a very likely cause of accidents.

SRI V. K. KOTHANDARAMAN: ஸார், கனம் அமைச்சர் அவர்கள் பஸ்களிலே ரேடியோ வைப்பதன் காரணத்தினால் பஸ் விபத்துக்கள் ஏற்படுகின்றன என்று கூறி, அதனால் தான் இந்த ரேடியோக்களை வைக்கக்கூடாது என்று போட்டிருப்பதாகக் கூறினார்கள். ஆகவே இப்போது பதிலில் அந்த மாதிரி தகவல்